**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 09.02.2022

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் புதிய பயிர் இரகங்கள் வெளியீடு

தமிழக விவசாயப் பெருமக்களின் வாழ்க்கைத் தரம் உயர, அவர்களின் தேவையை அறிந்து, ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல புதிய பயிர் இரகங்களை வெளியிட்டு வருகிறது. இவ்வருடம் **2022 ஆம் ஆண்டு 17** புதிய இரகங்களை வேளாண் மற்றும் தோட்டக்கலை விவசாயிகளுக்காக வெளியிடுகிறது. இந்தப் பயிர் இரகங்களை வேளாண்மைத்துறை முதன்மை செயலர், வேளாண்மைத்துறை இயக்குநர், தோட்டக்கலைத்துறை இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக செயல் துணைவேந்தர் மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் முன்னிலையில் 52-வது மாநில பயிர் இரகங்கள் வெளியீட்டுக் குழுவால் அங்கிகரிக்கப்பட்டு, குழுவின் ஒப்புதலுடன் அரசுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. இதில் **வேளாண் பயிர்கள் 9 இரகங்கள், தோட்டக்கலை மற்றும் காய்கறி பயிர்கள் 8 இரகங்கள், 4 விவசாய தொழில்நுட்பங்கள் மற்றும் 5 பண்ணை இயந்திரங்கள்** அடங்கும்.

இந்த பயிர் இரகங்களில் குறுகிய கால நெல் இரகங்கள் (கோ.55, ஏடீடி 57) வறட்சி மற்றும் மண் வள தன்மைக்கு எற்ற நெல் இரகங்கள் (டிகேஎம் 15, டிஆர்ஒய் 5) பயிறு வகைகள் (உளுந்து ஏடீடி 7, பச்சைபயிறு வம்பன் 5) நிலக்கடலை இரகங்கள் (விஆர்அய் 9 மற்றும் 10) மற்றும் கரும்பு இரகங்கள் (கோஜி 7) ஆகியவை விவசாய பயிர்களாக வழங்கப்படும். தோட்டக் கலை மற்றும் காய்கறி துறையில் வாழை கோ 3, பலா பிகேஎம் 1, நாவல் பிகேஎம் 1, கத்தரி எம்டியு 2, அவரை கோ 15, சேனைக் கிழங்கு கோ 2, மஞ்சள் பிஎஸ்ஆர் 3 மற்றும் கொத்தமல்லி கோ 5 ஆகியவை அடங்கும் என்று பல்கலைக்கழக செயல் துணைவேந்தர் முனைவர் அ.சு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் தெரிவித்தார்.

| | | | |
|---|---|---|---|
| 1 | நெல் கோ 55 | 10 | வாழை கோ 3 |
| 2 | நெல் ஏடீடி 57 | 11 | பலா பிகேஎம் 1 |
| 3 | நெல் டிகேஎம் 15 | 12 | நாவல் பிகேஎம் 1 |

| | | | |
|---|---|---|---|
| 4 | நெல் டிஆர்ஒய் 5 | 13 | கத்திரி எம்டியூ 2 |
| 5 | உளுந்து ஏடீடி 7 | 14 | அவரை கோ 15 |
| 6 | பச்சைபயிறு விபிஎன் 5 | 15 | சேனைக் கிழங்கு கோ 1 |
| 7 | நிலக்கடலை விஆர்அய் 9 | 16 | மஞ்சள் பிஎஸ்ஆர் 3 |
| 8 | நிலக்கடலை விஆர்அய் 10 | 17 | கொத்தமல்லி கோ 5 |
| 9 | கரும்பு கோஜி 7 | | |

**வேளாண் பயிர் இரகங்கள்**

**1. நெல் கோ 55**

கோ 55 என்ற இரகம் ஏடீடி 43 X ஜிஇபி 24 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இது குறுகிய கால இரகம், 115 நாள் வயதுடையது. இந்த இரகம் சராசரியாக 6050 கிலோ / ஹெக்டேர் மகசூல் கொடுக்கவல்லது. இதில் 66 சதவீதம் அரவை திறனும் 62 சதவீதம் முழு அரிசி காணும் திறனும் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் சொர்ணாவாரி, கார், குறுவை, நவரை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது. சமையலுக்கு உகந்த மத்திய சன்ன இரகமாகும்.







**2. நெல் ஏடீடி 57**

ஏடீடி 57 என்ற இரகம் ஏடீடி 45 X ஏசிகே 03002 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இது குறுகிய கால இரகம், 115 நாள் வயதுடையது. சராசரியாக 6500 கிலோ / ஹெக்டேர் மகசூல் கொடுக்கவல்லது. இதில் 69 சதவீதம் அரவை திறனும் 60 சதவீதம் முழு அரிசி காணும் திறன் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் சொர்ணாவாரி கார், குறுவை, நவரை மற்றும் கோடை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது. சமையலுக்கு உகந்த மத்திய சன்ன இரகமாகும்.






**3. நெல் டிகேஎம் 15**

டிகேஎம் 15 என்ற இரகம் டிகேஎம் 12 X ஐஇடி 21620 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இது குறுகிய கால இரகம், 115-120 நாள் வயதுடையது. இந்த இரகம் சராசரியாக 4200 கிலோ / ஹெக்டேர் மகசூல் மத்திம வறட்சியில் கொடுக்கவல்லது. இதில் 68 சதவீதம் அரவை திறனும் 63 சதவீதம் முழு அரிசி காணும் திறன் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் நேரடி நெல் விதைப்பிற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விதைக்க ஏற்ற இரகமாகும். சமையலுக்கு உகந்த மத்திய சன்ன இரகமாகும். வறட்சி மற்றும் நீர்பற்றாக்குறை சூழ்நிலைகளில் தாங்கி வளரும் பண்புகளைக் கொண்டுள்ளது.





**4. நெல் டிஆர்ஒய் 5**

டிஆர்ஒய் 2-ன் மரபு உருமாற்றத்தில் பெறப்பட்டது. இது குறுகிய கால இரகம் மற்றும் 115-120 நாள் வயதுடையது. இந்த இரகம் சராசரியாக 5100 கிலோ / ஹெக்டேர் மகசூல் மத்திம வறட்சியில் கொடுக்கவல்லது. இதில் 64 சதவீதம் அரவை திறனும் 54 சதவீதம் முழு அரிசி காணும் திறன் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் குறுவை, பின் தாளடி மற்றும் நவரை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது. சமையலுக்கு உகந்த மத்திய சன்ன இரகமாகும். உவர் நிலங்களுக்கு ஏற்ற இரகமாகும்.










**5. உளுந்து ஏடீடி 7**

ஏடீடி 3 என்ற இரகம் மரபு உருமாற்றத்தில் பெறப்பட்டது. இது 65-70 நாள் வயதுடையது. இந்த இரகம் சராசரியாக 724 கிலோ / ஹெக்டேர் மகசூல் கொடுக்கவல்லது. நெல் தரிசுக்கு உகந்த இரகம்.





**6. பச்சைபயிறு விபிஎன் 5**

விபிஎன் 5 என்ற இரகம் விபிஎண் (ஜிஜி)2 x எம்எல் 1451 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இது 70-75 நாள் வயதுடையது. இந்த இரகம் சராசரியாக 870 கிலோ / ஹெக்டேர் மகசூல் கொடுக்கவல்லது. மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டுள்ளது. இது தமிழ்நாட்டில் கரீப் (ஜுன்-ஜுலை) ரபி (செப்டம்பர்-அக்டோபர்) மற்றும் கோடை (ஜனவரி-பிப்ரவரி) போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்ற இரகமாகும்.



**7. நிலக்கடலை விஆர்அய் 9**

விஆர்அய் 9 என்ற இரகம் விஜி 0420 X விஆர்ஜ ஜிஎன் 6 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இது குறுகிய கால இரகம், 95-110 நாள் வயதுடைய அடர் கொத்து இரகமாகும். இந்த இரகம் சராசரியாக 2500 கிலோ / ஹெக்டேர் மகசூல் கொடுக்கவல்லது. எண்ணெய் சத்து 47 – 49 சதவீதம் கொண்டுள்ளது. இது இலைப்புள்ளி மற்றும் துரு நோய்க்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. பயிர் முதிர்ந்த பருவத்தில் முதிர்ந்த காய்கள் செடியிலேயே முளைக்கும் பண்பு அற்றது. இது தமிழ்நாட்டில் சித்திரை, ஆடி, ஐப்பசி போன்ற பருவங்களில் மழைக்கால பயிராகவும் மார்கழிப்பட்டத்தில் இறவை பயிராகவும் பயிரிட ஏற்ற இரகமாகும்.



**8. நிலக்கடலை விஆர்அய் 10**

விஆர்அய் 10 என்ற இரகம் விஆர்ஜ 2 X என்ஆர்சிஜி சிஎஸ் 349 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இது குறுகிய கால இரகம், 95 நாள் வயதுடைய அடர் கொத்து இரகமாகும். இந்த இரகம் சராசரியாக 2530 கிலோ / ஹெக்டேர் மகசூல் கொடுக்கவல்லது. எண்ணெய் சத்து 48 சதவீதம் கொண்டுள்ளது. இது இலைப்புள்ளி மற்றும் துரு நோய்க்கு மிதமான எதிர்ப்புத் தன்மைக் கொண்டது. பயிர் முதிர்ந்த பருவத்தில் முதிர்ந்த காய்கள் செடியிலேயே முளைக்கும் பண்பு அற்றது. இது தமிழ்நாட்டில் சித்திரை, ஆடி, ஐப்பசி போன்ற பருவங்களில் மழைக்கால பயிராகவும் மார்கழிப்பட்டத்தில் இறவை பயிராகவும் பயிரிட ஏற்ற இரகமாகும்.



**9.கரும்பு கோஜி 7**

கோஜி 7 என்ற இரகம் 89 வி 74-ன் தாய்வழி தேர்வில் உருவாக்கப்பட்டது. இந்த இரகம் சராசரியாக 134 டன் / ஹெக்டேர் கரும்பு மகசூல் நல்ல மண் வள தன்மையிலும் மற்றும் 126 டன் / ஹெக்டேர் கரும்பு மகசூல் உவர் நிலத்திலும் கொடுக்கவல்லது. சர்க்கரை மகசூல் 17.8 டன் / ஹெக்டேர் மகசூல் ஆகும். சிகப்பு அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.



**தோட்டக் கலை மற்றும் காய்கறிப் பயிர்கள்**

**10. வாழை கோ 3**


கோ 3 என்ற இரகம் கற்பூரவள்ளி (ஏபிபி) X எச்201 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இதன் வயது 13 மாதங்கள். இதன் வாழைக்குலையில் 12 சீப்புகளும் ஒரு சீப்பில் 16 பழங்களும் கொண்டிருக்கும். வாழைக்குலையின் எடை சராசரியாக 21 கிலோ எடை கொண்டிருக்கும். பழம் வெளிர் நிற மஞ்சள் நிறத்தில் சாம்பல் நிற படிவம் இல்லாமல் காணப்படும். இது வேர் நுண்புழு தாக்குதலை தாங்கி வளரும் தன்மைக் கொண்டது.



**11. பலா பிகேஎம் 1**

இது தாய் மரபு வழித் தேர்வால் உருவாக்கப்பட்டது. பழத்தின் எடை 21 கிலோ, ஒரு மரத்திற்கு 2.3 டன் பழங்கள் கொடுக்கவல்லது. ஒரு மரத்திற்கு 106 பழங்கள் கிடைக்கும்.

ஹெக்டேருக்கு 156 மரங்கள் நடலாம். வருடத்தில் மார்ச் - மே மற்றும் நவம்பர் - டிசம்பர் என இரண்டு அறுவடைகள் செய்யலாம். இது வெப்ப மண்டல மற்றும் மிதமான வெப்ப மண்டல பகுதிகளுக்கும் பயிர் செய்ய ஏற்றது.






**12. நாவல் பிகேஎம் 1**

இது தாய்வழி மரபு தேர்வால் உருவாக்கப்பட்டது. மரத்தின் கிளைகள் கீழ்சாய்ந்த வண்ணம் காணப்படும். பெரிய பழங்கள், ஒரு பழத்தின் எடை 17 கிராம், மரத்திற்கு 82 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. இதில் மருத்துவ குணங்களான ஆண்டி ஆக்ஜிடண்ட் மற்றும் முக்கிய தாதுகள் உள்ளன. இது வறண்ட பயன்படாத நிலங்களில் பயிர் செய்ய ஏற்ற பழவகை மரமாகும்.



**13. கத்தரி எம்டியூ 2**

எம்டியூ 2 என்ற இரகம் ஏசிஎம் எஸ்எம் 9 X அண்ணாமலை 1 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இதன் வயது 140 நாட்கள். இந்த இரகம் சராசரியாக 31 டன் / ஹெக்டேர் மகசூல் கொடுக்கவல்லது. இந்த இரகம் ஜுன் - செப்டம்பர், மற்றும் நவம்பர் - பிப்ரவரி போன்ற மாதங்களில் பயிரிட ஏற்றது. தண்டு துளைப்பான் மற்றும் பூஞ்ஞாண நோய்க்கு மிதமான எதிர்ப்பு திறன் கொண்டது.




**14. அவரை கோ 15**

கோ 15 என்ற இரகம் எல்பி (பி) 17 X எல்பி (பி) 6 என்ற மரபு கலப்பின சேர்க்கையால் உருவாக்கப்பட்டது. இது கொம்பில் வளரக்கூடிய இரகமாகும். செடிக்கு 14 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. பச்சை அவரைகள் நட்ட 70வது நாள் முதல் காய்க்க தொடங்கி 240 நாட்கள் வரை காய்க்கும், சுமாராக 25 அறுவடைகள் செய்யலாம்.



**15. சேனைக் கிழங்கு கோ 1**

இது மரபு வங்கித் தேர்விலிருந்து உருவாக்கப்பட்டது. இந்த இரகம் 240 நாட்கள் வயதுடையது. இதன் கிழங்கு மகசூல் 50 டன் / ஹெக்டேர். இதை பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடவு செய்யலாம். இந்த இரகம் தமிழ்நாட்டில் சேனைக்கிழங்கு பயிரிடப்படும் மாவட்டங்கள் மற்றும் சரளை மண் நிலவகைகளுக்கு ஏற்றது.




**16. மஞ்சள் பிஎஸ்ஆர் 3**

இந்த இரகம் பகுதம்பாளையம் தாய் வழித் தேர்விலிருந்து உருவாக்கப்பட்டது. இந்த இரகம் 240-250 நாட்கள் வயதுடையது. மஞ்சள் மே முதல் ஜுன் மாதங்களில் நடவு செய்யலாம். மஞ்சள் மகசூல் 51 டன் / ஹெக்டேர். இதில் கற்கூமின் பொருள் 4.8 சதவீதம் என்ற அளவில் மற்ற இரகங்களைவிட அதிகமாக உள்ளது. இலைப்புள்ளி நோய் மற்றும் இலை கருகல் நோய் போன்றவற்றிக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. தமிழ்நாட்டில் மஞ்சள் பயிரிடும் எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றது.



**17. கொத்தமல்லி கோ 5**

இது மரபு வங்கியிலிருந்து தேர்வு செய்யப்பட்டது. கரீப் மற்றும் ரபி பருவங்களில் பயிர் செய்ய ஏற்றது. இலை மகசூல் 35வது நாட்கள் முதல் அறுவடை செய்யலாம். ஹெக்டேருக்கு 4.7 டன்கள் என்ற அளவில் மகசூல் கிடைக்கும். லினாலூள் என்ற வேதிப் பொருள் சற்று அதிகமாக உள்ளது.



**தொழில்நுட்பங்கள்**

(1) மண் மேம்பாட்டு தொழில் நுட்பத்தில் துத்தநாகத்தை கரைக்கும் நுண்ணுயிர் பாக்டீரியா கலவை மண்ணில் உள்ள துத்தநாகத்தை முழுதாக கரைத்து கொடுக்கும். (2) மஸ்க்மிலான் உலர் தூள், குளிர் பானம் தயாரிக்க உதவும், மேலும் வைட்டமின் சி நிறைந்துள்ளது. (3) புதிதாக கண்டறியப்பட்ட ஈஸ்ட் கலவை பயிர் வகைகளில் தழைச்சத்தை சேமிக்கும்

ரைசோபியம் பாக்டீரியாவின் செயல்திறனை ஊக்குவித்து அதிமான வாயு மண்டல தழைச்சத்தை சேமிக்க உதவும். (4) குதிரைவாளியில் சமச்சீர் உரமுறை மற்றும் பயிறுக்கு தேவையான சரியான உரத்தை பரிந்துரைக்கிறது.

**பண்ணைக் கருவிகள்**

(1) பண்ணை இயந்திரங்களில் முக்கியமாக தேங்காய் மற்றும் பழ வகைகளை தரம் பிரிக்கும் கருவி, விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் பெரியது, சிறியது மற்றும் நிறத்தை கொண்டு பிரிக்க உதவும்.



Colour Sorter for Fruits
பழங்களை நிறம் மூலம் பிரித்தெடுத்தல்

(2) நெல் பயிர்களில் களையெடுக்கும் இயந்திர கருவி மூலம் நெல் நட்ட வயல்களில் களைகளை ஒன்று அல்லது இரண்டு முறை எடுக்க உதவும்.



Compound Parabolic Solar Dryer
கலவை பரவளைய சூரிய உலர்த்தி

(3) சூரிய ஒளியில் உலர வைக்கும் பெரிய கூண்டு கருவி மூலம் தேங்காய் கொப்பரை, மிளகாய் மற்றும் காய்கறிகளை பதப்படுத்தவும் மற்றும் உலர வைக்கவும் உதவும்.



(4) வீட்டு உபயோகத்திற்காக சூரிய ஒளியில் உலர வைக்கும் சிறிய கூண்டு கருவியினால் வீட்டு உபயோகத்திற்கான மற்றும் சமையலுக்கு தேவைக்காக காய்கறிகளை உலர்த்த உதவும்.



Weeder attachment to paddy transplanter
நெல் நடவு இயந்திரத்தினால் இயங்கும் களையெடுக்கும் கருவி

(5) புல் மற்றும் சிறிய புதர்களை டிராக்டர் இணைப்புடன் வெட்டும் கருவி மூலம் புல் தரைகள், தடவழிகள், நிறுவனங்களின் சுற்றுப்புற தூய்மை பணிகள் மற்றும் அழகான பசுமையை பராமரிக்க உதவும்.



Mini tractor operated brush cutter

மேற்கூறிய அனைத்து புதிய பயிர் இரகங்களும் தொழில் நுட்பங்களும் மற்றும் பண்ணை இயந்திரங்களும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தினால் 52-வது தமிழ்நாடு அரசு பயிர் வெளியீட்டு குழுவால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக செயல் துணைவேந்தர் முனைவர். அ.சு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் கூறுகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்லைக்கழகம் கடந்த நூறு வருடங்களில் 865 இரகங்களை வெளியிட்டுள்ளது. இந்த வருடம் பதினேழு புதிய இரகங்கள் வெவ்வேறு வானில மண்டலங்களுக்கும் ஏற்றவாறு வெளியிடப்பட்டுள்ளது. இந்த புதிய இரகங்களை பயிரிட்டு விவசாயிகள் நன்மைகளை பெற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்பு அலுவலர்